9th July 1962]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காகத்தான் மேற்கொண்டு மூன்று என்ஜினியரிங் காலேஜுகள் வைப்பதாக உத்தேசித்திருக்கிறோம்.

* 204 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the present stage of the proposal to open a Regional Engineering College in Tiruchirappalli; and

(b) the details of the States for which seats would be allotted in the college?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Preliminary steps like land acquisition, preparation of plans and estimates, etc., have been taken up.

(b) The College will have an ultimate intake of 250 seats of which 50 per cent will be for the Madras State, 30 per cent for the other States in the Southern Region and 20 per cent for the other parts of the country.

சுயமரியாதைத் திருமணங்கள்.

* 205 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் நடக்கும் சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்க சர்க்கார் ஏதாகிலும் நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: 1955-ல் முன்னாள் நிதியமைச்சராக இருந்தவர் இந்தச் சட்ட மன்றத்திலே " சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாவதற்குச் சட்டம் கொண்டுவரப் போகிறோம்" என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அகில இந்திய ரீதியிலே ஹிந்து திருமணச் சட்டம் வந்தது. அந்தச் சட்டம் வந்த பிறகும், பழைய முறை தான் அமலில் இருக்கிறது. ஒன்று ரெஜிஸ்தர் பண்ணியோ, அல்லது புரோகிதரை வைத்தோ தான் திருமணம் செய்ய முடியும். அதிகமான சுயமரியாதைத் திருமணங்கள் நடக்கின்ற காரணத்தினாலே, இந்த ரிஜிஸ்டர் பண்ணுகிற புரொசீஜரை ஸிம்பிளிபை செய்வதன்மூலம் பொது மக்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களைக் குறைக்கலாம். ஆகவே ரெஜிஸ்டர் பண்ணுகிற அதிகாரத்தை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பிரச்னையை அரசாங்கம் பரிசீலனை செய்ததிலே, இதற்காக ஒரு சட்டம் செய்வதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பது புலப்பட்டது. இம்மாதிரி திருமணங்களை ரெஜிஸ்டர் செய்வதற்கு 'ஸ்பெஷல் மேரியேஜ் ஆக்ட்' இருக்கிறது. எவ்வளவோ செலவு செய்து கல்யாணம்